DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பாலமுருகன்** | Caste | : | |
| Father Name | : | **சுப்ரமணியன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **31.10.2025.**

**PW - 1**

**( 1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் துறையூர் வட்டம், எரகுடி கிராமம், உப்பிலியர் தெருவில் வசிக்கிறேன். நான் ஜேசிபி ஆப்பரேட்டராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக் எனது தம்பி. கடந்த 25.05.2019 அன்று என் தம்பி கார்த்திக், ஹரிபாலன் என்பவரிடமிருந்து காரை ஓட்டி பார்ப்பதற்காக வாங்கி சென்றார். எரகுடி விஏஓ அலுவலகம் அருகே என் தம்பி கார்த்திக் காரால் பைக்கில் வந்த ஒரு பெரியவர் மீது இடித்துவிட்டார். அவர்மீது இடித்துவிட்டு என் தம்பி நிற்காமல் போய்விட்டார். அந்த பெரியவர் வீட்டில் இருந்த இரண்டு நபர்கள் என் தம்பியை அதே காரில் விஏஓ அலுவலகம் அருகே வைத்திருந்தார்கள். ஆஜர் எதிரிகள் 6 பேரையும் தெரியும். எதிரிகள் என் தம்பியை விசாரித்தார்கள்.

எங்கள் சொந்தக்காரர் மீது எப்படி இடிக்கலாம் என்று அடிக்க ஆரம்பித்தார்கள். நான் சம்பவம் நடந்த இடத்திலேயேதான் இருந்தேன். என்னையும் சேர்த்து அடிக்க ஆரம்பித்தார்கள். என் தம்பியை விட்டுவிடு என்று சொன்னேன் கேட்கவில்லை. 1 ஆம் எதிரி சரவணன் பெரியவர் மீது இடித்துவிட்டாய் உன்னை கொன்றால்தான் மனது ஆறும் என்று சொன்னார். என் தம்பியை கீழே படுக்கப்போட்டு மிதித்துவிட்டார்கள். தேக்க சென்ற என்னையும் எதிரிகள் 6 பேரும் அடித்தார்கள். என் தம்பியை காப்பாற்றி சேகர் என்பவருடன் எரகுடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். என் தம்பியை இறக்கிவிட்டுவிட்டு வந்த சேகர் என்னிடம் எனது தம்பியை மருத்துவமனையில் விட்டுவிட்டு வந்துள்ளதாகவும், அவர் தண்ணீர் கேட்டதாகவும் என்னை கொண்டு சென்று கொடுக்கும்படியும் சொன்னார். நான் என் தம்பியை எரகுடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு என் தம்பி கார்த்திக் இல்லை. பின்பு தெரிந்த இடங்களிளெல்லாம் தேடினேன், காணவில்லை. மேற்படி சம்பவம் எனது அம்மா, அப்பாவிற்கு தெரியும். தேடிப் பார்த்துவிட்டு பின்பு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எதிரிகள் 6 பேரும் எங்கள் வீட்டிற்கு வந்து பஞ்சாயத்து வைத்தார்கள். விபத்தில் காயம்பட்ட சிதம்பரம் என்பவருக்கு மருத்துவ செலவிற்காக ரூ.20000/- பணம் கேட்டார்கள். நாங்கள் ரூ.8000/- தான் உள்ளது என்று கொடுத்தோம். அதை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். எரகுடியில் உள்ள வீரப்பன் வாழைத்தோட்டத்தில் உள்ள சமாதியில் என் அப்பா போய் பார்த்தபோது என் தம்பி கார்த்திக் அங்கு இறந்துகிடந்தார். எரகுடியில் உள்ள போலிஸ் ஸ்டேசனில் புகாரை ஒரு போலிஸ்காரர் எழுதினார். பெயர் ஞாபகமில்லை. அதை அந்த காவல்நிலையத்திலேயே கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் இதுதான். அந்த புகார் **அதசாஆ.1** ஆகும். மேற்படி சம்பவத்தில் எனக்கு காயம்

ஏற்பட்டது, சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. என் தம்பிக்கு கழுத்து, நெஞ்சு, தலை, உயிர்நாடி ஆகிய இடங்களில் எதிரிகள் 6 பேரும் அடித்ததால்தான் காயங்கள் ஏற்பட்டது. கட்டை மற்றும் கை, கால்களால் அடித்தார்கள். அந்த கட்டையைப் பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் கட்டைதான் அதுவாகும். அது **அதசாபொ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 3, 4, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல்விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். என் தம்பி ஓட்டி வந்த கார் ஒரு பெரியவர் ஓட்டிவந்த பைக்கில் இடித்துவிட்டது என்றும், அந்த பெரியவர் வீட்டிலிருந்த இரண்டு நபர்கள் என் தம்பியை காரில் விஏஓ அலுவலகம் அழைத்து வந்தார்கள் என்ற விபரத்தையும் நான் புகார் மற்றும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். என் தம்பியை எதிரிகள் வந்து விசாரித்த விபரத்தை நான் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சேகர் என் தம்பியை மருத்துவமனையில் விட்டுவிட்டு வந்தபோது அவர் தண்ணீர் கேட்டார் என்றும் என்னை கொண்டுபோய் கொடுக்கும்படி நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை. என் அப்பா போய் பார்த்தபோது வீரப்பன் தோட்டத்தில் உள்ள சமாதி முன்பு என் தம்பி இறந்துகிடந்தார் என்ற விபரத்தை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். புகார் எரகுடி காவல்நிலையத்தில் போலிஸ்காரரால் எழுதப்பட்டது என்பதையும், அந்த புகாரை அங்கேயே நான் கொடுத்தேன் என்பதையும் போலிஸ் விசாரணையில் சொன்னேன். எனக்கு காயம் ஏற்பட்டது என்பதை புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை. என் தம்பியை எதிரிகள் அடித்ததில் அவருக்கு கழுத்து, தலை,

நெஞ்சு, உயிர்நாடி ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்ற விபரத்தை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். நான் ஐடிஐ படித்துள்ளேன். இந்த சம்பவத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே நான் ஜேசிபி ஆப்பரேட்டர் வேலைக்காக ஈரோடு சென்றுவிட்டேன். அந்த காலகட்டங்களில் திருவிழா, விசேஷங்களுக்கு எங்கள் ஊருக்கு வருவேன். என் தம்பி ஓட்டி வந்த கார் விபத்து ஏற்படுத்தியதாக கூறும் ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். அந்த இடத்தில் ரோட்டின் இரண்டு பக்கமும் வரிசையாக கடைகள், விஏஓ அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகம் ஆகியவை உள்ளன என்றால் சரிதான். அந்த ரோடு வடக்கில் கிழக்கு பக்கமாக வளைந்து செல்கிறது என்றால் சரிதான். அந்த வளைவிற்கு மேற்கு பக்கம் நாகம்மாள் மற்றும் மூவரின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த வீடுகள் தகர செட்டு போட்ட வீடுகளா என்றால் ஞாபகமில்லை. அந்த வளைவிற்கு அருகில் அந்த வீடுகளுக்கு பக்கத்தில் அந்த விபத்து அன்றைய தினம் நடந்தது என்றால் சரிதான். அந்த கார் யாருக்கு சொந்தமானது என்றும், எங்கிருந்து எப்போது எப்படி எடுத்துவந்தார் என்று தெரியுமா என்றால் அந்த கார் ஹரிபாலுக்கு சொந்தமானது என்று சொன்னார். அது சிவப்பு நிற காராகும். அதன் தயாரிப்பு நிறுவனம், பதிவு எண் போன்ற விபரங்கள் தெரியாது. போலிஸ் விசாரித்தபோது காரின் பதிவு எண், என்ன வகையான கார் என்பதையும் நான் சொல்லவில்லை. விபத்து நடந்த எரகுடி சாலை போக்குவரத்து மற்றும் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள சாலை என்றால் சரிதான். அன்றைய தினம் எனது தம்பி ஓட்டிவந்த காரில் வேறு யார் உடனிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த கார் மற்றும் இருசக்கர வாகனத்திற்கு என்னென்ன சேதங்கள் ஏற்பட்டது என்று தெரியாது. விபத்து நடந்த உடன் அந்த பகுதியில் நிறைய ஆட்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அங்கு 50 அல்லது 60 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் ஏன் விபத்து ஏற்படுத்திவிட்டு காரை நிறுத்தாமல்

சென்றாய் என்று என் தம்பியிடம் போன் மூலம் கேட்டேனா என்றால் இல்லை. அந்த விபத்தைப் பற்றி எனக்கு சொன்னது ஹரிபால்தான். ஹரிபால் எனக்கு தகவல் சொன்ன பிறகுதான் நான் விபத்து நடந்த இடத்திற்கு போனேன். சாட்சி தாமாக கூறுகிறார் – அது 5 அல்லது 10 நிமிடம்தான் இருக்கும். ஹரிபால் எனக்கு போனில்தான் தகவல் சொன்னார். அதிலிருந்து 5 அல்லது 10 நிமிடத்தில் நான் அங்கு சென்றேன். நான் சென்று பார்த்தபோது சிதம்பரம் அங்கு இல்லை. அதன்பிறகு என் தம்பியை அழைத்து வந்தபோது ஊர்மக்கள் நிறைய பேர் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அந்த இடத்தில் 100 பேர் இருந்திருப்பார்கள் என்றால் 50 பேர் வரை இருந்திருப்பார்கள். என் தம்பியை கூட்டி வந்து விசாரித்த இடத்தில் நானும், எனது தம்பியும் சுமார் 20 நிமிடம் வரை இருந்தோம். அப்போது என் தம்பிக்கு கழுத்து, நெஞ்சு, தலை, உயிர்நாடி ஆகிய இடங்களில் அடிபட்டு காயமாயிருந்தது. அதனால் என் தம்பி அணிந்திருந்த உடைகளில் இரத்தம் பட்டுவிட்டது. அன்றைய தினம் என் தம்பி கருப்பு கலர் சட்டை, வெள்ளைகலர் வேட்டி அணிந்திருந்தார். என் தம்பி அணிந்திருந்த சட்டை மற்றும் வேட்டியில் இரத்தக்கறை இருந்ததா என்றால் அது சரியாக ஞாபகமில்லை. காயம்பட்ட என் தம்பியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்தேனா என்றால் நான் தான் முயற்சி செய்து என் தம்பியை வண்டியில் ஏற்றிவிட்டேன். அந்த இடத்திற்கும் எரகுடி மருத்துவமனைக்கும் 1 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்காது. 1/4 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கும். நான் அதன்பிறகு 1/4 மணி நேரத்தில் எரகுடி மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் நடந்துதான் மேற்படி மருத்துவமனைக்கு சென்றேன். நான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று என் தம்பி சிகிச்சை பெற்றாரா இல்லையா என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், என் தம்பி அங்கு வந்ததாகவும், அவர் சிகிச்சை பெறவில்லை என்றும் சொன்னார்கள். அதன்பிறகு என் தம்பிக்கு செல்போன் மூலம்

அழைத்தேன், ரிங் போனது, ஆனால் அவர் எடுக்கவில்லை. அதன்பிறகு மீண்டும் போன் மூலம் அவரை அழைக்க முயற்சித்தேனா என்றால் இல்லை, தெரிந்த இடங்களில் தேடினேன். இந்த வழக்கு விசாரணையின்போது என் தம்பி வைத்திருந்த செல்போன் எண் பற்றி போலிசார் கேட்கவில்லை. அன்றைய தினம் என் தம்பி வைத்திருந்த செல்போன் எண் தற்போது ஞாபகமில்லை. அந்த செல்போன் என்ன ஆனது என்று இன்று வரை தெரியாது. போலிசாரிடம் என் தம்பியின் செல்போன் என்ன ஆனது என்று தெரியவில்லை என்று சொன்னேனா என்றால் இல்லை. வீரப்பன் வாழைத்தோட்டம் எங்கள் ஊருக்கு தெற்கே மயானம் மற்றும் வயல்களுக்கு செல்லும் கீழ்கரை என்ற பகுதியில்தான் உள்ளது என்றால் சரிதான். கீழ்கரை என்பது உயரமான பாதை என்றால் சரிதான். அந்த பாதைக்கும் தெற்கே வயல்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த கீழ்கரையிலிருந்து சுமார் 500 மீட்டர் தெற்கே வீரப்பன் வாழைத்தோட்டத்தின் ஓரமாக அந்த சமாதி உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் எனது அப்பா சொன்ன உடன் நான் அந்த இடத்திற்கு போனேன். நான் அங்கு சென்றபோது என் தம்பி படுத்திருந்த இடத்தில் இரத்தக்கறை இல்லை, அவர் மீது கண் மற்றும் மூக்கு ஆகிய இடங்களில் இரத்தக்கறை இருந்தது. ஊர்க்காரர்கள் போன் செய்து போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். நான் சென்று பார்த்த பிறகு 3/4 மணி நேரத்தில் போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது அங்கிருந்த என்னையும், எனது குடும்பத்தாரையும் போலிசார் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். போலிசார் வந்து 1/2 மணி நேரத்தில் ஆம்புலன்சை வரவழைத்து எனது தம்பியின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு எரகுடியில் உள்ள போலிஸ் அவுட்போஸ்ட்டிக்கு என்னை அழைத்து சென்று நான் சொல்லி போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகாரை எழுதியவர் விஜயகுமார் என்ற உதவி ஆய்வாளர் எழுதினாரா என்றால் பெயர் தெரியாது, அப்பாவைதான் கேட்கவேண்டும். அதன்பிறகு நானும், எனது

குடும்பத்தாரும் என் தம்பி பிரேதம் இருந்த துறையூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் துறையூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது 03.00 அல்லது 04.00 மணிக்குள் இருக்கும். துறையூர் அரசு மருத்துவமனையில் என்னையும், எனது அப்பா, அம்மாவையும் போலிசார் விசாரித்தார்கள். எங்களை விசாரித்த விபரங்களை போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை எதுவும் செய்யவில்லை. காயம்பட்ட சிதம்பரத்திற்கு தலையில் காயம் ஏற்பட்டு அவர் துறையூர் அன்னை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட விபரம் எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக எனது தம்பி பேரில் வழக்கு போடவில்லை, எங்களிடம் பஞ்சாயத்து பேசி அபராதம் வாங்கிக் கொண்டார்கள். அந்த பஞ்சாயத்து எம்ஜி என்பவர் வீட்டில் வைத்துதான் பேசப்பட்டது என்றால் சரிதான். காயம்பட்ட சிதம்பரம் குடும்பத்தினர் மருத்துவ செலவு முழுவதையும் கொடுக்குமாறும், வழக்கு போடவேண்டாமென்றும் சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த பணத்தை எம்ஜி வீட்டில் வைத்து கடைக்காரர் சங்கர் என்பவர்தான் கொடுத்தார் என்றால் சரிதான். பஞ்சாயத்து பேசியபோது மருத்துவ செலவு முழுவதையும் தருமாறும், வழக்கு போட வேண்டாமென்று பேசப்பட்டது என்றும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் ரூ.20000/– கேட்டார்கள், நாங்கள் ரூ.8000/– கொடுத்தோம். பாக்கி பணத்தை பின்பு தருகிறோம் என்று சொன்னோமா என்றால் இல்லை. என் தம்பி எரகுடி மருத்துவமனையிலிருந்து எத்தனை மணிக்கு, எப்படி வீரப்பன் வாழைத்தோட்டத்திற்கு சென்றார் என்ற விபரம் எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் தெரியாது. 1 ஆம் எதிரி எம்ஜி என்பவரின் மகன் என்றால் சரிதான். 3 ஆம் எதிரி எம்ஜியின் தம்பி என்றால் சரிதான். 3 ஆம் எதிரிதான் அன்றைய தினம் சிதம்பரத்தை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்

என்றால் அந்த விபரம் தெரியாது. சம்பவம் நடந்த அன்று இரவே எதிரிகள் 5 பேர் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். ஒரு நபர் வரவில்லை. அவர் தலைமறைவாகிவிட்டார். நான் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் எதிரிகள்6 பேரும் என் தம்பியை தாக்கவில்லை என்றும், காயங்கள் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பி இறப்பிற்கும், எதிரிகள் யாருக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு என் தம்பி இறந்து கிடந்ததால் சிதம்பரம் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டிய இழப்பீட்டை கொடுக்கக்கூடாது என்பதற்காக எதிரிகள் தான் என் தம்பியின் இறப்பிற்கு காரணம் என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாபொ.1 போன்ற கட்டைகள் கிராமத்தில் சாதாரணமாக கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் அந்த கட்டையின் அளவு, அடையாளம் சொல்லவில்லை. என் தம்பி இறந்துபோனதால் போலிசார் சொல்லிக் கொடுத்தன்பேரில் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவம் நடந்த அன்று ஒரு போலிசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். அவர் பெயர் ஞாபகமில்லை. விசாரித்தவர் ஆய்வாளர் அல்ல என்றால் சரியாக தெரியாது. நான் புகார் கொடுப்பதற்காக உப்பிலியபுரம் காவல்நிலையத்திற்கு போகவில்லை. போலிஸ் விசாரணையில் எங்கள் வீட்டிற்கு வந்து பணம் வாங்கி சென்ற நபர்களின் பெயர்களில் 2 ஆம் எதிரி வரதராஜன் பெயர் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் அப்போது அங்கு இல்லை. அரசு மருத்துவமனையிலிருந்து என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு செல்ல மீண்டும் சம்பவ இடம் வழியாகதான் செல்லவேண்டுமென்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையிலிருந்தே போய்விடலாம். நான் நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களைத் தவிர வேறு விபரங்கள் இருந்தால் அது நான் போலிசாரிடம்

சொன்ன வாக்குமூலம் இல்லை என்றால் ஆமாம். நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(இதர விபரங்கள் தொடர்பாக மற்ற எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை 2 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது).**

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.